[1990 ஏப்ரல் 6

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து நேற்றையதினம் மத்திய நீர் வளத்துறை அமைச்சர் மாண்புமிகு மனுபாய் கொட்டாடியா அவர்கள் இப்பிரச்சினையிலே சம்பந்தப்பட்ட 4 மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டியது பற்றியும், அதிலே நானும் மற்ற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டது பற்றியும் இந்த அவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் காலையில் நான்கு மாநில முதலமைச்சர்கள், பொதுப்பணித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் பேசும் பொழுது 22 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பிரச்சினை காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்றும், பிரச்சினை ஆரம்பித்த போது கர்நாடக மாநில முதல்வராக இருந்த வீரேந்திர பாட்டீல் அவர்களும், அப்போது தமிழக பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நானும் —— மீண்டும் இப்போது இரண்டு மாநில முதல்வர்களாக இருந்து பேச வந்திருப்பதாகவும்—ஆனால் 22 ஆண்டுகளாகப் பிரச்சினை தீராமல் இருப்பதாகவும், இதுவரை 24 முறை முதலமைச்சர்கள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் கூட்டங்கள் நடைபெற்றிருப்பதாகவும், இது 25-ஆவது கூட்டம் என்றும் கூறியதோடு 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் தேதியிலேயே இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று, தமிழக அரசின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி—இப்போது மீண்டும் 1980-ல் இது குறித்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இருப்பதால் இன்றைய பேச்சுவார்த்தையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்காவிட்டால் நடுவர் தீர்ப்புக்கு இதனை விடுவதை விட தமிழக அரசுக்கு வேறு வழியில்லை என்பதையும் உறுதியாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்தேன்.

12-15 மணி

அடுத்து, கர்நாடக மாநிலத்தின் சார்பாக முதலமைச்சர் மாண்புமிகு திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் பேசும்போது மீண்டும் ஒரு முறை பேச்சு வார்த்தை மூலமே முயற்சி செய்யலாம் என்றும் அதுவும் வெற்றி பெறாவிட்டால் பின்னர் நடுவர் மன்றத்திற்கு செல்லலாம் என்றும் தெரிவித்தார். அடுத்து மத்திய அமைச்சரின் விருப்பத்தின் பேரில் 4 மாநில முதலமைச்சர்களும், அமைச்சர்களும் மட்டும் அமர்ந்து ஒரு சில முக்கிய அதிகாரிகள் துணையோடு பேசினோம். அப்போது கர்நாடகமும் தமிழ் நாடும் இதில் முக்கியப் பங்கு பெற்று இருப்பதால் அவர்களிடையே கருத்து ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என்ற கருத்து

வலியுறுத்தப்பட்டது. காவிரிப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை விவசாயிகள் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதும், அந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு நடுவர் தீர்ப்புக் கோரி வாதாடுவதும் இந்த அவை உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும். இந்தப் பிரச்சினையிலே உச்ச நீதிமன்றம் தனது முடிவினைத் தெரிவிப்பதற்கு —— —— ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் மத்திய அரசு, சம்பந்தப்பட்ட அரசுகளோடு கலந்து பேசி உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ளது. எனவே, நான் தொடர்ந்து கூறும்போது கர்நாடக அரசு விரும்புவது போல் மீண்டும் ஒரு முறை பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயார்; ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ள ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் நடைபெற்று ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும் என்று கூறினேன்.

என்னுடைய கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டதின் அடிப்படையில், வரும் 19 ஆம் தேதி மாலையில் தமிழக அரசின் சார்பில் நானும், கர்நாடக அரசின் சார்பில் வீரேந்திர பாட்டீல் அவர்களும், சென்னையிலேயே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்றும், இரு மாநில பேச்சு வார்த்தை வெற்றி பெறுமேயானால், அடுத்த நாளான 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று மாலை சென்னையிலே மத்திய அமைச்சர் கொட்டாடியா, கேரள, புதுவை மாநில முதல் அமைச்சர்களும் கலந்துகொண்டு தமிழக, கர்நாடக முதல்வர்களோடு பேசி, இறுதி முடிவு காண்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதனையொட்டி 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடி கருத்துக்களைப் பெறவிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக ''ராயல்டி'' கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுப்பதற்குக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை. நெய்வேலி பழுப்பு நிலக்கரி வாரியம் 1956 ஆம் ஆண்டிலிருந்து பழுப்பு நிலக்கரி எடுத்துக்கொண்டிருந்தாலும் அதற்காகக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை மாநில அரசுக்கு கொடுக்கப்படாமல் இருந்தது. ராயல்டிக்குப் பதிலாக